MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# பரத்தமை

திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி,
உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
திஸ்டாண்டர்டு்ஃபயர்ஒர்க்ஸ்இராஜரத்தினம்மகளிர்கல்லூரி,சிவகாசி.
vellaithuraichi-tam@sfrcollege.edu.in 7639770943.

DOI 10.5281/zenodo.12753213.

**Abstract :**

**In the history of Tamil literature, the Sangam period can be called the golden age. Love and war were the two eyes of Sangam people. Sangam literature is the literature that reflects the life of the Sangam people. The Sangam people lived with male and female equality. However, women are oppressed in some places. In this research article, we will see in detail about prostitution, the punishment given to the leader who goes to prostitutes, and the fact that quitting prostitution was considered a drunken crime.**

**Key Words : Tamil Literature - Sangam Era - Tamil Poets - Parathamai**

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் பொற்காலம் எனலாம். சங்ககால மக்களின் இரு கண்களாக காதலும், போரும் இருந்தன. சங்ககால மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களாக சங்க இலக்கியங்கள் உள்ளன. சங்ககால மக்கள் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானத்துடன் வாழ்ந்தார்கள். எனினும் பெண்கள் ஒருசில இடங்களில் நசுக்கப்பட்டுள்ளனர். இவ்ஆய்வுக்கட்டுரையில் பரத்தமை குறித்தும், பரத்தையிடம் சென்று வரும் தலைவனுக்கு அளிக்கப்பட்ட தண்டனை குறித்தும், பரத்தை தொழிலிருந்து விலகுதல் குடிக்குற்றம் எனவும் கருதியது குறித்தும் விரிவாகக் காண்போம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

## பரத்தமை

கணவன் தன் மனைவியை விடுத்துப் பிற பெண்களுடன் உறவு கொள்வது பரத்தமை ஒழுக்கமாகும். பரத்தமை காரணமாக தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இவ்பரத்தமைவொழுக்கப் பிரிவினைத் தொல்காப்பியரும் சுட்டிக் காட்டுவர். பரத்தையிற் பிரிவு நால்வகை நிலத்தாருக்கும் உண்டு. இதற்கு நிலத்திரிபு இல்லை என விளம்புவதை,

**"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**
**நிலத்திரிபு இன்று அஃதே என்மனார் புலவர்"**

**(தொல்.பொருள்.நூ.1170)**

என்ற நூற்பா வழி அறிய இயலுகின்றது. தொல்காப்பியர் காலத்தைப் போன்று சங்ககாலத்திலும் பரத்தமை ஒழுக்கம் காணப்பட்டது. இச்செயல் தொல்காப்பியர் காலத்திலும் சரி, சங்க காலத்திலும் சரி குற்றமாக நேரடியாகச் சுட்டப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை. ஆனால், சங்க இலக்கியங்களில் தலைவி ஊடல் என்ற சிறு தண்டனையை அளிக்கின்றாள். தலைவியின் ஊடலை நினைத்துத் தலைவன் அஞ்சுகின்றான். இச்செய்தியினை புலவர்கள் தங்கள் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் அகநானூறு (பாடல் எண். 6, 16, 26, 36, 46, 56, 66, 79,86, 96, 106, 116, 126, 136, 146, 156, 166, 176, 186, 196, 206, 216, 226, 236, 246, 256, 266, 276, 286, 296, 306, 316, 326, 336, 376, 386, 396), ஐங்குறுநூறு (பாடல் எண். மருதத்திணைப் பாடல்கள் - 100), கலித்தொகை (மருதக்கலிப் பாடல்கள் - 66 முதல் 100 வரை), குறுந்தொகை (பாடல் எண். 8, 10, 19, 31, 33, 34, 35, 45, 46, 50, 53, 61, 75, 80, 85, 89, 91, 93, 107, 113, 127, 138, 139, 157, 164, 169, 171, 178,


http://Creativecommons.org//license/by/4.0/.

181, 196, 202, 203, 231, 238, 258, 271, 293, 295, 305, 309, 330, 354, 359, 364, 367, 368, 370, 384, 393, 399), நற்றிணை (பாடல் எண். 20, 30, 40, 50, 90, 100, 120, 150, 170, 180, 200, 210, 216, 230, 250, 260, 280, 290, 300, 310, 320, 330, 340, 350, 360, 370, 380, 400), பரிபாடல் (பாடல் எண். 6, 12, 16, 20, 22) முதலான இலக்கியங்களில் பரத்தமை குறித்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

## பரத்தைப் பிரிவு

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தமை ஒழுக்கம் நிலவியதைச் சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அக்கால ஆடவர்கள் தம் மனையாளை விட்டுப் பிரிந்து பரத்தையருடன் வாழ்ந்ததை சங்கப் புலவர்கள் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளனர். பரத்தமை என்பது ஐந்திணைக்கும் பொதுவானதாக இருப்பினும் மருதத் திணையில் மட்டுமே அதிகம் பேசப்படுகின்றது. பரத்தமைத் தொழிலில் ஈடுபட்ட ஆடவர், மகளிர் குறித்து ஆறுமுகம், “பரந்துபட்ட இன்பத்தைத் தருகின்றவர் பரத்தையர். பரந்து அதற்காகச் செல்பவர் பரத்தர். பரத்தர் என்ற ஆண்பாற் பெயருக்குப் பரத்தையர் என்ற பெண்பாற் பெயர் வழங்குகிறது”[1] என்று விளம்புகின்றார். மேலும் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டு வந்த மகளிர் செல்வ வளம் உடையவர்களிடம் தமது கலைகளை நிகழ்த்திப் பொருள் பெற்று வாழ்ந்தமையும் அறியப்படுகின்றது.

பரத்தையர் குறித்து இளம்பூரணர் தமது தொல்காப்பிய உரையில் “பரத்தையராவர் யாவரெனின் அவர் ஆடலும் பாடலும் வல்லவராகி அழகும் இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுத் தங்காதவர்”[2] என்று குறிப்பிடுகின்றார். பரத்தமை குறித்து உ.வே.சா “பலவகையானும் உயர்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

நெறியாகிய அன்புடைய வாழ்க்கை, பூவிற்குப் புல்லிதழ் வாய்த்தற் போலவும் மதிக்கு மறு வாய்த்தற் போலவும் பரத்தையிற்பிரிவு என்னும் இழிந்த ஒழுக்கத்தினால் சிறிது கலக்கமடைகிறது."[3] எனக் குறிப்பிடுகின்றார். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் இவ்வாறான பரத்தமைக் குறித்துப் பேசப்படுகின்றது.

தலைவன் பரத்தையரிடம் பிரிந்து சென்றதனால் தலைவி கைவளை கழன்று விழுமளவிற்கு உடல் மெலிவுற்று, பசலை நோய் கொண்டு வருந்தினாள் என்பதைக் குன்றியனார் என்னும் புலவர் சுட்டுவதை,

**"இலங்குவளை நெகிழச் சாஅய்ப்**
**புலம்பணிந் தன்றவர்மணந்த தோளே"**

**(குறுந்.50 : 4-5)**

என்ற பாடலடிகள் விளக்கி நிற்கின்றன. பரத்தையரிடம் சென்ற ஆடவர்கள் அங்கேயே சில காலம் தங்கிவிடுதலும் உண்டு. பரத்தையரிடம் சென்று மீண்ட தலைவனிடம் தோழி, நாங்கள் அமைதியாக இருப்பினும் அயலவர்கள் நீ பரத்தை ஒருத்தியை மணம் புரிந்து வாழ்வதாகக் கூறுகின்றனர். அத்தகைய பழியை நாங்கள் கூற விழையவில்லை! நீ வாழ்க என்று வாழ்த்தவும் செய்கிறோம் என்று குறிப்பிடுகின்றார். இதனை நன்முல்லையார் என்னும் புலவர்,

**"வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியாங்**
**கூறேம் வாழிய…………." (அகம்.46 : 10-11)**

என்று சுட்டுகிறார். பரத்தை மணம் நிலவியது குறித்து இதன் வழி அறியமுடிகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

பரத்தமை மேற்கொள்ளும் ஆண்களுக்கு தலைவி ஊடல் என்ற தண்டனையையும், பெரியோர்கள் அவையில் இடித்துக் கூறுதல் என்ற தண்டனையும் வழங்கியுள்ளனர்.

வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருத நிலத்திற்குரிய உரிப்பொருள் ஊடலும், ஊடல் நிமித்தமும் ஆகும். புலவிக்கும் ஊடலுக்கும் இளம்பூரணர் தரும் விளக்கமாவது "புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கது"[4] என்கிறார். பரத்தையர் பிரிவு மேற்கொண்டு இல்லம் திரும்பும் தலைவன் மீது தலைவி ஊடல் கொள்கின்றாள். களவில் இன்பத்தைக் கொடுத்தத் தலைவன் பரத்தையர் சேர்க்கை காரணமாகக் கற்புக் காலத்தில் துன்பம் தருபவனாக உள்ளான் என்கிறாள் ஒரு தலைவி. இதனை, நெருஞ்சியானது முதலில் அழகிய மலரைத் தந்து பின்னர் துன்பம் தரும் முள்ளையும் தருவது போலத் தலைவன் உள்ளான் என்பதைத் தலைவி குறிப்பிடுகிறாள்.

**"புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
**கட்கின் புதுமலர் முட்பயந்தா அங்**
**இனிய செய்தநங் காதலர்**
**இன்னா செய்த னோமொன் நெஞ்சே"** (குறுந்.202 : 2-5)

என்று தலைவி கூறுவதாக அள்ளூர் நன்முல்லையாரின் பாடலடிகள் அமைந்துள்ளன. களவுக்காலத்தில் இனிமையுடைய தலைவன் பரத்தையர் பிரிவால் தலைவிக்கு இன்னாதவன் ஆகிறான் என்பது சுட்டப்படுகின்றது. இவ்வாறான பிரிவை ந.சுப்புரெட்டியா, "பரத்தையிற் பிரிதல் என்பது தலைமகளை வரைந்தெய்திய பின்னர் கைவகலும் பாலே நுகர்வான் இடையே


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

புளியங்காடியையும் நுகர்ந்து அதன் இனிமையறிந்தான் போல, அவள் நுகர்ச்சியினிமை அறிதற்குப் புறப்பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல்”[5] என்று கூறுவதால் மேலும் அறியப்படுகின்றது.

பரத்தையரிடம் இன்பம் துய்த்து மீண்ட தலைவன் தலைவியின் ஊடலைத் தணிக்கத் தோழியை வாயிலாக அனுப்புகிறான். தூதாக வந்த தோழிக்கு வாயில் மறுத்த தலைவி தலைவன், அன்னையும் தந்தையும் போன்ற அன்பு கொண்டவர் இல்லை. எனது அழகு நலம் கெட்டு, உடல் மெலிந்து, உயிர் பிரிவதாயினும் சரி. அவன் மீது பரிவு கொண்டு இனிய சொற்களைக் கூற வேண்டாம் என்று வெகுண்டுரைக்கின்றாள். இதனை,

**“இன்னுயிர் கழியினு முரைய லவர்நமக்**
**கன்னையு மத்தனு மல்லரோ தோழி**
**புலவியஃ தெவனோ வன்பிலங்கடையே”**

என்ற பாடலடிகள் வழி அறியலாம். தலைவன் பிள்ளையின் துயர் அறிந்து போக்கும் பெற்றோரைப் போன்ற அன்பு கொண்டவனாக இருந்திருந்தால் தமது துயர் அறிந்து போக்கியிருப்பான் என்று தலைவி கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

## பரத்தமை - அவையத்தார் இடித்துக் கூறி திருத்துதல்

தலைவி ஒருத்தி பரத்தையுடன் வாழும் கணவனைத் தேடிக் கண்டுபிடித்து ஊரவையினர் முன் அழைத்துவர முயல்கின்றாள். அவனோ ஊரவையினரின் தண்டனைக்கு அஞ்சி அவளிடமிருந்து தப்பித்து விடுகின்றான். இவ்வாறு பரத்தையிற் பிரிந்து வாழும் கணவனை அவையத்தாரிடம் ஒப்படைத்தால்,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அவனை அடித்து இடித்துக்கூறி மனைவியுடன் வாழச் செய்யும் வழக்கம் அன்று இருந்துள்ளது. "பொருள் வழங்குவோரைக் கண்ணாகிய கயிற்றாலே தோளாகிய தறியில் கட்டிக் காமவின்பம் மிகும்பொருட்டு இசையினையும் எம்பாற் களவுகொண்ட அணிகளை அணிந்து கொண்ட அவ்வழகையும் ஊட்டாநின்ற பொதுமகளே! முன்னர்க் கெட்டுப்போன எம் எருதினைத் தேடிக் கண்டுபிடித்து வணக்கி இவ்வையையாகிய தொழுவத்திற் புகவிட்டு அடித்து இடித்து இவ்வழக்குரைக்கும் அவையத்தார்க்கு அஃது எம் எருதாதலை அறிவிக்க நின்னைத் தொடர்ந்தேம். வேளாளர்க்குத் தம் எருதைத் தொழில் செய்யாது ஓடவிடுதல் முறைமையன்றோ"[6] என்று தலைவியின் தோழியர் பரத்தையுடன் சண்டை தொடுத்தனர். இதனால் தலைவி தோழியருடன் வந்து தன் கணவன் உறவு கொண்ட பரத்தையைத் தேடிக் கண்டு அவளைத் தொடர்ந்து சென்று கணவனைப் பிடிக்க முனைந்தாள். இதனை,

**"மடமதர் உண்கண் கயிறாக வைத்துத்**
**தடமென்றோள் தொட்டுத் தகைத்து மடவிரலால்**
**இட்டார்க் கியாழார்த்தும் பாணியில் எம்மிழையைத்**
**தொட்டார்த்தும் இன்பத் துறைப்பொதுவி கெட்டதைப்**
**பொய்தல் மகளிர்கண் காண இகுத்தந்திவ்**
**வையைத் தொழுவத்துத் தந்து வடித்திடித்து**
**மத்திகை மாலையா மோதி அவையத்துத்**
**தொடர்ந்தேம் எருது தொழில்செய்யா தோட**
**விடுங்கடன் வேளாளர்க் கின்று"** (பரி.20 : 55-63)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்னும் வரிகள் உணர்த்துகின்றன. “கண்ணகியோடு கூடி காதல்வாழ்வு நடத்தும் பேகனுக்கு அவன் நாட்டு நல்லூரின்கண் வாழ்ந்த பரத்தை ஒருத்தியிடம் புறத்தொழுக்கம் வளர்ந்தது. கண்ணகியை கைவிட்டான். கண்ணகி பெரிதும் வருந்தினாள். அவர் பொருட்டுக் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் முதலியோர் பேகன்பால் சென்று தெருட்டினர். அவனும் தன் மனைவியுடன்கூடி இனிதிருந்தான்”[7]. பொதுமக்களில் பரத்தை காரணமாகப் பிரிந்த தலைவனை அவையினர் தண்டித்துத் திருந்தியதுபோலப் பரத்தமையால் மனைவியைப் பிரிந்த அரசனுக்குப் புலவர்கள் அறிவுரை கூறி மனைவியுடன் சேர்த்து வைத்தனர்.

## பரத்தையிலிருந்து விலகுதல் - குடிக்குற்றம்

சங்க காலத்தின் பிற்பகுதியில் பரத்தையர் சமூகம் தனித்த பிரிவுடையதாக வளரத் தொடங்கியது. அது குலத்தொழிலானது. அக்குலத்தொழிலிருந்து விடுபட நினைப்பவர்களைக் குடிக்குற்றம் புரிந்தவராகக் கருதித் தண்டித்தனர். “பதியிலாரில் சாதிக்குற்றப்பட்டார் தலையிலே ஏழு செங்கல் ஏற்றி ஊர் சூழ்வித்துக் கழித்து விடுதல் மரபு”[8] என்கிறார் அடியார்க்கு நல்லார்.

“அரங்கக் கூத்தியரில் குடிக் குற்றப்பட்டவரைச் சுடுமணி ஏற்றி ஆடலரங்கைச் சுற்றச் செய்து அப்புறப்படுத்திவிடுவர். அவருக்கு அதன்பின் அரங்கக் கூத்தியர் வாழும் வீட்டில் புக உரிமை இல்லை. அதனோடு அரங்கேறும் உரிமையையும் இழந்துவிடுவர். இங்குச் சொல்லப்படும் குடிக்குற்றம் என்றால் என்ன? கணிகை வாழ்க்கையை வாழ மறுப்பதே குடிக்குற்றம். அதாவது துறவு பூணுவது, ஒருவனோடு வாழ உடன்படுவது முதலியன குடிக்குற்றமாகும். ஆகவே


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

ஒரே ஆடவருடன் நிலைத்த தொடர்பு கொள்ளவோ பெறவோ கணிகையருக்கு உரிமையில்லை. அவர்களுடைய பரத்தமை வாழ்க்கையை விட்டுவிடாதபடி பல சட்டங்களைச் சமூகம் விதித்திருந்தது"[9] என்று குறிப்பிடுவர்.

மணிமேகலையில், மணிமேகலையை மீண்டும் துறவு நெறியிலிருந்து மீட்டுக் கணிகையர் தொழிலுக்கு உதயகுமரன் உதவியுடன் அழைத்து வருவேன் என்று சித்ராபதி சூளுரைப்பதை,

**"மாதவி என்ற மணிமே கலைவல்லி**
**போதுஅவிழ் செல்வி பொருந்துதல் விரும்பிய**
**உதயகுமரன்ஆம் உலகுஆள் வண்டின்**
**சிதையா உள்ளம் செவ்விதின் அருந்த,**
**கைக்கொண்டு ஆங்கு - அவள் ஏந்திய கடிஞையைப்**
**பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி**
**மற்று - அவன் - தன்னால் மணிமே கலை - தனைப்**
**பொன்தேர்க் கொண்டு மோதேன் ஆகில்,**
**சுடுமண் ஏற்றி, அரங்குசூழ் போகி,**
**வடுவொடு வாழும் மடந்தையர் - தம்மோர் -**
**அனையேன் ஆகி, அரங்கக் கூத்தியர்**
**மனைஅகம் புகாஅ மரபினள், என்றே**
**வஞ்சினம் சாற்றி,..........." (மணி.கா.18 : 25-36)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இவ்வாறு பரத்தையர் தங்கள் குலத்தொழிலில் இருந்து விலகுதல் குடிக்குற்றமாகக் கருதப்பட்டு அதற்குத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது.

## முடிவுரை

சங்ககாலத்தில் பரத்தமை வேரூன்றி இருந்தது. ஆனாலும் கூட பரத்தமை மேற்கொள்பவர் அரசனாக இருந்தாலும் அவனைப் புலவர்கள் இடித்துக்கூறி


http://Creativecommons.org//license/by/4.0/.

திருத்தியுள்ளதையும், அவையத்தார் முன்னிலையில் பரத்தை மேற்கொண்ட தலைவனைத் தலைவி அழைத்து வர முற்படும்போது, அவர்கள் வழங்கும் தண்டனைக்கு அஞ்சி தலைவன் தப்பித்து ஓடுகின்றான். இதன் வழியாக பரத்தைமை குற்றமாகக் கருதப்பட்டதையும், அதற்கு தண்டனை வழங்கப்பட்டதையும் அறியமுடிகின்றது. ஆனால் இன்ன தண்டனை எனக் குறிப்பிடப்படவில்லை. பரத்தை தொழிலிருந்து விடுபடுதல் குடிக்குற்றமாகக் கருதி, அவர்களை அரங்கக்கூத்தியர் வாழும் தெருவிலிருந்து ஒதுக்கிவைத்தும், அவர்கள் தலையில் ஏழு செங்கல்லை ஏற்றி ஊரைச் சுற்றி வரச் செய்தும் தண்டனை வழங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகினறது. ஆணும் பெண்ணும் சமமாக இருந்தாலும் அவர்கள் போக்கில் அவர்களை வாழவிடாமல் சமூகம் பல சட்டங்களை வகுத்திருந்ததை அறியஇயலுகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. அ.ஆறுமுகம், சங்கஇலக்கியத்தில்குடும்பம், உடைமை, அரசு, ப.56.
2. தொல்.பொருள்.இளம்.(உ.ஆ), ப.295.
3. உ.வே.சாமிநாதையர், குறுந்தொகைநூலாராய்ச்சி, ப.73.
4. தொல்.பொருள்.இளம்.(உ.ஆ), ப.306
5. ந.சுப்புரெட்டியா, அகத்திணைக்கொள்கைகள், ப.257.
6. பொ.வே.சோமசுந்தரனார்(உ.ஆ), பரிபாடல், ப.381.
7. ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை(உ.ஆ), புறம். பகுதி-1, ப.296.
8. உ.வே.சா(ப.ஆ), சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையுயும், ப.360.
9. க.நெடுஞ்செழியன், இரா.சக்குபாய், சமூகநீதி, ப.29.


http://Creativecommons.org//license/by/4.0/.